அனுப்புநர்
திருமதி. ஆ. விஜயலட்சுமி, M.R.Sc.,
மாவட்ட சமூகநல அலுவலர், (பொ),
மாவட்ட சமூகநல அலுவலகம்,
திருப்பத்தூர்.

பெறுநர்
சமூக நல ஆணையர்,
சமூக நல ஆணையரகம்,
லேடி வெலிங்டன் கல்லூரி வளாகம்,
காமராஜர் சாலை,
சென்னை 600005.

ந.க.எண்: 413/DHEW/2024 நாள்: .03.2024

அம்மையீர்:

பொருள்: சமூகநலம் - மாவட்ட சமூகநல அலுவலகம் - திருப்பத்தூர் - பணியிடங்களில் பாலியல் வன்கொடுமையிலிருந்து பெண்களை பாதுகாக்கும் (தடுப்பு, தடை மற்றும் தீர்வு) சட்டம், 2013 புகார் மனுக்களை பெறுவதற்கு தாலுக்கா, கோட்டம், வட்டாரம், ஒன்றியம் மற்றும் நகராட்சி அளவில் மைய முனை அலுவலர்கள் (Nodal Officers) நியமித்தல் - தொடர்பாக.

பார்வை: 1.பணியிடத்து பாலியல் வன்கொடுமையிலிருந்து பெண்களை பாதுகாக்கும் சட்டம், (தடுப்பு, தடை மற்றும் தீர்வு) 2013.
2.சமூக நல ஆணையர், சென்னை-05 அவர்களின் செ.மு.ந.க.எண்.58645/WW2(3)/2013, நாள்: 29.10.2019.
3.சமூக நல ஆணையர், சென்னை-05 அவர்களின் ந.க.எண்.3325/SRCW/2024, நாள் 07.03.2024.

பார்வையில் காணும் கடிதத்தின் படி, திருப்பத்தூர் மாவட்டத்தில் பாலியல் வன்கொடுமையிலிருந்து பெண்களை பாதுகாக்கும் சட்டம் (தடுப்பு, தடை மற்றும் தீர்வு) 2013 – ன் படி, வருவாய் கோட்டம், வட்டம், ஊராட்சி ஒன்றியம் மற்றும் நகராட்சி அளவில் புகார் மனுக்களை பெறுவதற்கு ஏதுவாக இணைப்பில் கண்டவாறு மைய முனை (Nodal Officers) அலுவலர்கள் நியமிக்கப்பட்டுள்ளார்கள் என்ற விவரம் பணிவுடன் தெரிவித்துக்கொள்கிறேன்.

மேலும் மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்களின் செயல்முறை ஆணையும் இத்துடன் இணைத்து அனுப்பப்படுகிறது.

ஆ. விஜய

மாவட்ட சமூகநல அலுவலர் (பொ),
திருப்பத்தூர்.

இணைப்பு:
மைய முனை அலுவர்கள் நியமன ஆணை

திருப்பத்தூர் மாவட்ட ஆட்சியர் அவர்களின் செயல்முறை நடவடிக்கைகள்
பிறப்பிப்பவர்: திரு.க.தர்ப்பகராஜ், இ.ஆ.ப., அவர்கள்

செ.மு.ந.க.எண்: 413/DHEW/2024, நாள்: .03.2024.

பொருள்: சமுகநலம் -மாவட்ட சமுகநல அலுவலகம் - திருப்பத்தூர் மாவட்டம் - பணியிடங்களில் பாலியல் வன்கொடுமையிலிருந்து பெண்களை பாதுகாக்கும் (தடுப்பு, தடை மற்றும் தீர்வு) சட்டம், 2013 – புகார் மனுக்களை பெறுவதற்கு தாலுக்கா, கோட்டம், வட்டாரம், ஒன்றியம் மற்றும் நகராட்சி அளவில் மைய முனை அலுவலர்கள் (Nodal Officers) நியமித்து ஆணை வழங்க அனுமதி வேண்டுதல் - தொடர்பாக.

பார்வை: 1.பணியிடத்து பாலியல் வன்கொடுமையிலிருந்து பெண்களை பாதுகாக்கும் (தடுப்பு, தடை மற்றும் தீர்வு) சட்டம், 2013.
2.சமூகநல ஆணையர், சென்னை அவர்களின் செ.மு.ந.க.எண்.58645/WW2(3)/2013, நாள் 29.10.2019.
3.சமூகநல ஆணையர், சென்னை அவர்களின் ந.க.எண்.3325/SRCW/2024, நாள் 07.03.2024.

ஆணை:-

பார்வை 1-ல் தெரிவித்துள்ளபடி, திருப்பத்தூர் மாவட்டத்தில் 10 நபர்களுக்கு கீழ் பணிபுரியும் அனைத்து பணியிடங்களிலும் பாலியல் வன்கொடுமையிலிருந்து பெண்களை பாதுகாக்கும் பொருட்டு, மாவட்ட அளவில் உள்ளூர் புகார் குழு அமைக்கப்பட்டுள்ளது. அதனைத் தொடர்ந்து புகார் மனுக்களை பெறுவதற்கு தாலுக்கா அளவில் வட்டாசியர்களையும், கோட்டம் அளவில் கோட்டாசியர்களையும், ஊராட்சி ஒன்றிய அளவில் வட்டார வளர்ச்சி அலுவலர்களையும், நகராட்சி அளவில் நகராட்சி ஆணையர்களையும் மைய முனை அலுவலர்களாக (Nodal Officers) கீழ்கண்டவாறு நியமனம் செய்து ஆணை வழங்கப்படுகிறது.

| வ.எண் | பொறுப்பு பகுதி | பொறுப்பு அலுவலர் |
|---|---|---|
| 1 | திருப்பத்தூர் கோட்டம் | கோட்டாட்சியர், திருப்பத்தூர் கோட்டம் |
| 2 | வாணியம்பாடி கோட்டம் | கோட்டாட்சியர், வாணியம்பாடி கோட்டம் |
| 3 | திருப்பத்தூர் வட்டம் | வட்டாட்சியர், திருப்பத்தூர் |
| 4 | நாட்றம்பள்ளி வட்டம் | வட்டாட்சியர், நாட்றம்பள்ளி |

| | | |
|---|---|---|
| 5 | வாணியம்பாடி வட்டம் | வட்டாட்சியர், வாணியம்பாடி |
| 6 | ஆம்பூர் வட்டம் | வட்டாட்சியர், ஆம்பூர் |
| 7 | திருப்பத்தூர் ஊராட்சி ஒன்றியம் | வட்டார வளர்ச்சி அலுவலர், திருப்பத்தூர் |
| 8 | கந்திலி ஊராட்சி ஒன்றியம் | வட்டார வளர்ச்சி அலுவலர், கந்திலி |
| 9 | ஜோலார்பேட்டை ஊராட்சி ஒன்றியம் | வட்டார வளர்ச்சி அலுவலர், ஜோலார்பேட்டை |
| 10 | மாதனூர் ஊராட்சி ஒன்றியம் | வட்டார வளர்ச்சி அலுவலர், மாதனூர் |
| 11 | நாட்றம்பள்ளி ஊராட்சி ஒன்றியம் | வட்டார வளர்ச்சி அலுவலர், நாட்றம்பள்ளி |
| 12 | ஆலங்காயம் ஊராட்சி ஒன்றியம் | வட்டார வளர்ச்சி அலுவலர், ஆலங்காயம் |
| 13 | திருப்பத்தூர் நகராட்சி | நகராட்சி ஆணையர், திருப்பத்தூர் |
| 14 | ஜோலார்பேட்டை நகராட்சி | நகராட்சி ஆணையர், ஜோலார்பேட்டை |
| 15 | வாணியம்பாடி நகராட்சி | நகராட்சி ஆணையர், வாணியம்பாடி |
| 16 | ஆம்பூர் நகராட்சி | நகராட்சி ஆணையர், ஆம்பூர் |

மாவட்ட ஆட்சித் தலைவர்,
திருப்பத்தூர் மாவட்டம்.

15/3/24

பெறுநர்:

சம்மந்தப்பட்ட அலுவலர்கள்,

நகல்:

சமுகநல ஆணையர்,
சமுகநல ஆணையரகம்,
லேடி வெலிங்டன் கல்லூரி வளாகம்,
காமராஜர் சாலை,
சென்னை 600005.